**மார்ச் – 23**

# TNPSC துளிகள்

❖ தமிழ்நாட்டின் மதுரையைச் சேர்ந்த சம்யுக்தா நாராயணன் (7), உலகின் மிகவும் இளம் டைக்வாண்டோ பயிற்றுவிப்பாளராக மாறி கின்னஸ் உலக சாதனையினைப் படைத்துள்ளார்.

❖ 2024 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தில் 1,540 கொலை வழக்குகள் பதிவாகியுள்ளது என்பதோடு இது கடந்த 12 ஆண்டுகளில் பதிவான மிகவும் குறைந்த ஒரு வருடாந்திர எண்ணிக்கை ஆகும்.

❖ சென்னை மெட்ரோ இரயில் அமைப்பின் இரண்டாம் கட்டத்திற்கான மெட்ரோ ரயில் போக்குவரத்து வலையமைப்பிற்கான முதல் ஓட்டுநர் இல்லாத இரயிலின் சோதனை ஓட்டம் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்டது.

❖ புது டெல்லியில் ஏற்பாடு செய்யப்பட்ட 2025 ஆம் ஆண்டு Medical Colleges Research Connect நிகழ்வில் அதன் செயல்திறனுக்காக மெட்ராஸ் மருத்துவக் கல்லூரி சிறப்பு விருதைப் பெற்றுள்ளது.


❖ அறிஞரும் கோட்பாட்டாளருமான காயத்ரி சக்ரவர்த்தி ஸ்பிவாக் 2025 ஆம் ஆண்டு ஹோல்பெர்க் பரிசை வென்றுள்ளார் என்ற ஒரு நிலைமையில் இது மனித நேயம், சமூக அறிவியல், சட்டம் அல்லது இறையியல் ஆராய்ச்சித் துறையில் நோபல் பரிசுக்கு சமமான விருதாகக் கருதப்படுகிறது.

❖ சுரங்க அமைச்சகம் ஆனது, இந்தியப் புவியியல் ஆய்வு மையத்துடன் (GSI) இணைந்து கனிம இலக்கு குறித்த IndiaAI ஹேக்கத்தானைத் தொடங்கியுள்ளது.

❖ ஹரியானாவில் உள்ள கோரக்பூர் என்ற ஒரு சிறிய நகரத்தில் 10,380 மெகாவாட் திறன் கொண்ட வட இந்தியாவின் முதல் அணுசக்தி நிலையம் நிறுவப்படவுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டில் தமிழகத்தின் நிதிநிலை




❖ தமிழக அரசின் நிதிநிலை ஆனது முன்னேற்றத்தின் அறிகுறிகளைக் காட்டுகிறது.

❖ 2021-22 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, ஒட்டு மொத்த செலவினங்களில் மூலதனச்

செலவினத்தின் விகிதம் ஆனது 2017-18 ஆம் ஆண்டில் 10.4% ஆகக் குறைந்த பிறகு படிப் படியாக 13% நோக்கி முன்னேறி வருகிறது.

- பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, சுமார் 86% என்ற அளவுப் பொதுக் கடனானது மூல தனச் செலவினங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது.
- அப்போதிலிருந்து, 2021-22 ஆம் ஆண்டில் இந்தப் பங்கு சீரான நிலையிலும் நேர் இறங்கு முகத்திலும் சுமார் 44% ஆகக் குறைந்தது.
- எதிர் வரும் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மதிப்பீடுகளின்படி, இது சுமார் 55% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- எதிர்வரும் ஆண்டில், ஒட்டு மொத்த உணவு மானியச் செலவினம் ஆனது 14,000 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- மாநில அரசானது, எதிர்வரும் ஆண்டில் மின் கட்டண மானியமாக மட்டும் 17,000 கோடி ரூபாயையும், இழப்பீடு நிதியாக 7,700 கோடி ரூபாயையும் வழங்க உள்ளது.

# தேசியச் செய்திகள்

## அஸ்வினி ரேடார்





- பாதுகாப்புத் துறை அமைச்சகமானது, காஜியாபாத்தில் உள்ள பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) நிறுவனத்துடன் இணைந்து LLTR எனப்படும் தாழ் மட்டத்திலான ரேடார் கருவியினை (அஸ்வினி) கொள்முதல் செய்வதற்காக ஒரு மூலதனக் கையகப்படுத்தல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- LLTR (அஸ்வினி) என்பது அதிநவீன திட-நிலை தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு செயலில் உள்ள மின்னணு முறையில் ஊடுகதிர் ஆய்வு செய்யப்பட்ட நிலை சார் தொகுப்பு ரேடார் ஆகும்.
- இந்த ரேடார் கருவியானது, அதிவேக போர் விமானங்கள் முதல் ஆளில்லா வான்வழி வாகனங்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் போன்ற மித வேகத்தில் நகரும் இலக்குகள் வரையிலான வான்வழி இலக்குகளைக் கண்காணிக்கும் திறன் கொண்டது.
- இதன் கொள்முதல் ஆனது, இந்திய விமானப்படையின் செயல்பாட்டுத் தயார் நிலை என்பதைக் கணிசமாக மேம்படுத்தும்.

## சுதேச தரிசனத் திட்டம் 2.0

- மத்திய அரசானது பல்வேறு திட்டங்களின் கீழ், நாடு முழுவதும் மொத்தம் 116 புதிய சுற்றுலாத் தலங்களை அனுமதித்துள்ளது.

- இவற்றில் 34 தலங்கள் ஆனது, சுதேச தரிசனம் 2.0 திட்டத்தின் கீழ் அனுமதிக்கப் பட்டு உள்ள நிலையில் அவற்றில் 42 தலங்கள் ஆனது சுதேச தரிசனத் திட்டத்தின் துணைத் திட்டமான "சவால் அடிப்படையிலான இலக்கு மேம்பாடு (CBDD)" என்ற திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- 40 தலங்கள் ஆனது, மாநிலங்களுக்கான மூலதன முதலீட்டிற்கான சிறப்பு உதவி (SASCI) திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும்.
- சுதேச தரிசனத் திட்டம் ஆனது, மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகத்தின் ஒரு மிகவும் முதன்மை முன்னெடுப்பாகும்.
- இது கருத்துரு அடிப்படையிலான தலச் சுற்றுகளில் கவனம் செலுத்துவதன் மூலமும், உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக மாநில அரசுக்கு நிதி உதவி வழங்குவதன் மூலமும் நிலையான மற்றும் மிகவும் பொறுப்பு மிக்கச் சுற்றுலா தலங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நிலையான சுற்றுலாத் தலங்களை உருவாக்கும் நோக்கத்துடன் இந்தத் திட்டம் ஆனது சுதேச தரிசனம் 2.0 (SD2.0) ஆக புதுப்பிக்கப்பட்டுள்ளது.




## திருத்தப்பட்ட இராஷ்ட்ரிய கோகுல் திட்டம் 2025

- கால்நடைத் துறையில், வளர்ச்சியை நன்கு அதிகரிக்கும் வகையில் திருத்தப்பட்ட இராஷ்ட்ரிய கோகுல் (RGM) திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதலை அளித்து உள்ளது.
- 2021-22 முதல் 2025-26 ஆம் ஆண்டு வரையிலான 15வது நிதி ஆணையச் சுற்றிற்காக இத்திட்டம் 3,400 கோடி ரூபாய் மொத்த ஒதுக்கீட்டைப் பெற்றுள்ளது.
- 15,000 பசுக்களுக்கு 30 தங்குமிட வசதிகளை அமைப்பதற்கான மூலதனச் செலவில் 35% நிதி உதவியை இது வழங்குகிறது.
- பால் பொருட்கள் உற்பத்தி சங்கங்கள் / நிதி நிறுவனங்களிடமிருந்து HGM IVF என்ற ஒரு இனப் பசுக்களைப் வாங்குவதற்காக விவசாயிகள் பெறும் கடன்களுக்கு 3% வட்டி மானியம் வழங்கப்படும்.
- கடந்த பத்தாண்டுகளில் பால் உற்பத்தி 63.55 சதவீதம் அதிகரித்துள்ளது.
- 2013-14 ஆம் ஆண்டில் ஒரு நாளைக்கு 307 கிராமாக இருந்த தனிநபர் பால் கிடைக்கும் தன்மையானது 2023-24 ஆம் ஆண்டில் ஒரு நாளைக்கு 471 கிராமாக உயர்ந்துள்ளது.
- கடந்த பத்து ஆண்டுகளில், பால் பொருட்கள் உற்பத்தித் திறனும் சுமார் 26.34 சதவீதம்

அதிகரித்துள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## SQUAD கூட்டணி – இந்தியா




- தென் சீனக் கடலில் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தும் ராணுவக் கூட்டணியில் இந்தியா விரைவில் இணைய உள்ளது.
- SQUAD கூட்டணியானது அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
- இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தை எதிர்ப்பதற்காக என உளவுத் துறை பரிமாற்றம் மற்றும் கூட்டு இராணுவப் பயிற்சிகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தியா ஏற்கனவே நாற்கரப் பாதுகாப்பு பேச்சுவாரத்தையில் (குவாட்) உறுப்பினராக உள்ளது.

## 1798 ஆம் ஆண்டு சட்ட விரோதமாகக் குடியேறிய வெளிநாட்டவர் சட்டம் – அமெரிக்கா


| Criteria | Description | Enforcement Status |
|---|---|---|
| State of War or Conflict | U.S. must be in a **declared war or open hostilities** with a foreign nation. | ✅ Required |
| Nationality of the Alien | Applies only to **citizens or subjects of an enemy nation** (not U.S. citizens). | ✅ Required |
| Presidential Authority | The **President determines** restrictions, detentions, or deportations. | ✅ Required |
| Threat to National Security | The individual must be **deemed a potential threat** to U.S. interests. | ⚠ Case-by-case |
| Due Process & Legal Review | Modern legal interpretations may require **court oversight** before enforcement. | ⚠ Case-by-case |
| Historical Precedents | Used in **WWI, WWII** for German, Italian, Japanese nationals. | ✅ Historically Used |
| Misuse Risks | Potential for **political suppression or racial discrimination** if misapplied. | ❌ Avoid Misuse |

- அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், நாட்டில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் மில்லியன் கணக்கான மக்களை நாடு கடத்தச் செய்வதற்கான அறிவிப்பில் சட்ட விரோதமாக குடியேறிய வெளிநாட்டவர் சட்டத்தினை செயல்படுத்தியுள்ளார்.
- ட்ரென் டி அரகுவா என்று பெயரிடப்பட்ட ஒரு வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்போடு தொடர்பு இருப்பதாகக் கூறப்படும் நூற்றுக்கணக்கான வெனிசுலா குடிமக்களை அமெரிக்காவிலிருந்து வெளியேற்றவும் அவர் உத்தரவிட்டார்.
- பிரான்சு நாட்டுடனான பிரச்சினைகளின் போது உளவுப் பணிகள் மற்றும் மிக அழிவு கரமான நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவதற்காகச் சட்டம் 1798 ஆம் ஆண்டில் சட்ட விரோதமாக குடியேறிய வெளிநாட்டவர் சட்டம் இயற்றப்பட்டது.
- இந்தச் சட்டம் ஆனது, இந்தச் செயலைச் செயல்படுத்தத் தூண்டிய நிகழ்வை அதிபர் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.
- அதிபர் அதை முடிவுக்குக் கொண்டு வரும் வரை இந்தச் சட்டம் அமலில் இருக்கும்.

## அமெரிக்காவில் H7N9 பறவைக் காய்ச்சல் தொற்று


- வணிக ரீதியான கோழி வளர்ப்பு பகுதிகளில், அதிக நோய்த்தொற்று மிக்க பறவைக் காய்ச்சல் (HPAI) வைரஸின் கொடிய H7N9 வகை தொற்று ஏற்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.
- பறவைக் காய்ச்சல் A (H7N9) என்பது கடந்த காலங்களில் பறவைகளில் கண்டறியப் பட்ட இன்ஃப்ளுயன்ஸா வைரஸ்களின் ஒரு துணை வகையாகும்.
- இந்த வைரஸ் ஆனது, முதன்முதலில் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சீனாவில் கண்டறியப் பட்டது.
- இது 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பிறகு அமெரிக்காவில் பதிவாகும் ஒரு இரண்டாவது தொற்றுநோயாகும்.
- H7N9 பறவைக் காய்ச்சல் வைரஸ் ஆனது, இந்த கொடிய வைரசினால் பாதிக்கப்பட்ட

மனிதர்களில் சுமார் 40 சதவீதம் பேர் உயிரிழந்ததுடன், மிக அதிக இறப்பு விகிதத்தைக் கொண்டிருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.





# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் பண வரவு குறித்த ஆறாவது கணக்கெடுப்பு 2023/24





- 2010-11 ஆம் ஆண்டில் 55.6 பில்லியன் டாலராக இருந்த இந்தியாவின் பண வரவுத் தொகையானது 2023-24 ஆம் ஆண்டில் 118.7 பில்லியன் டாலர் ஆக இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளது.
- உலகளாவிய பணப் பரிமாற்றங்களில் 14.3 சதவீதப் பங்குடன், இந்தியாவின் மொத்தப் பண வரவுத் தொகையானது 2024 ஆம் ஆண்டில் 129 பில்லியன் டாலராக அதிகரித்தது.
- இந்தியாவின் மொத்தப் பண வரவுத் தொகையில் 27.7 சதவீதப் பங்கைக் கொண்டு மிகப்பெரியப் பங்களிப்பாளராக ஐக்கிய அரபு அமீரகத்தினை அமெரிக்கா விஞ்சி உள்ளது.

- இந்தக் காலக் கட்டத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தின் பெரும் பங்கானது சுமார் 26.9 சதவீதத்திலிருந்து 19.2 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- இதே போல், 2016-17 ஆம் ஆண்டில் 3 சதவீதப் பங்கை மட்டுமே கொண்டிருந்த ஐக்கியப் பேரரசு ஆனது, 2023-24 ஆம் ஆண்டில் 10.9 சதவீத பங்குடன் சவுதி அரேபியாவை விஞ்சி உள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் மகாராஷ்டிரா மாநிலமானது, 20.5 சதவீத பங்கைக் கொண்டு உள்ளது.
- அதே காலக் கட்டத்தில் சுமார் 10 சதவீதப் பங்கினைக் கொண்டிருந்த கேரள மாநிலத்தின் பங்கானது 19.7 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- அதைத் தொடர்ந்து தமிழ்நாடு (10.4 சதவீதம்), தெலுங்கானா (8.1 சதவீதம்) மற்றும் கர்நாடகா (7.7 சதவீதம்) உள்ளன.




## 2024-25 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த ஏற்றுமதிகள்




- 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கான இந்தியாவின் மொத்த ஏற்றுமதிகளின் மதிப்பானது (சரக்கு மற்றும் சேவைகள் ஒரு சேர) 71.95 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்துடன் ஒப்பிடும்போது, இந்த ஆண்டில் 3.16

சதவீதம் என்ற நேர்மறையான வளர்ச்சியைப் பதிவாகியது.

❖ 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கான மொத்த இறக்குமதிகள் (சரக்குகள் மற்றும் சேவைகள் ஒரு சேர) 67.52 பில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.


❖ 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்துடன் ஒப்பிடும்போது (-)11.34 சதவீதம் என்ற எதிர் மறையான வளர்ச்சி பதிவாகியுள்ளது.

❖ 2024-25 ஆம் ஆண்டு ஏப்ரல்-பிப்ரவரி மாத காலக் கட்டத்தில், இந்தியாவின் மொத்த ஏற்றுமதிகள் ஆனது சுமார் 6.24 சதவீத நேர்மறையான வளர்ச்சியுடன் 750.53 பில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.

❖ 2024-25 ஆம் ஆண்டு ஏப்ரல்-பிப்ரவரி மாத காலக் கட்டத்தில், 7.28 சதவீத வளர்ச்சியுடன் மொத்த இறக்குமதிகள் ஆனது 839.89 பில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப் பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நுண் மின் கடத்தி- மில்லர்-யூரே கருதுகோள்




❖ சிறிய நீர்த்திவலைகளை தெளிப்பது ஒளிர்வை உருவாக்குகிறது மற்றும் சுற்றியுள்ள வாயுவில் இரசாயன எதிர்வினைகளை ஏற்படுத்துகிறது.

❖ 1952 ஆம் ஆண்டில், அமெரிக்க நாட்டு வேதியியலாளர் ஸ்டான்லி மில்லர் மற்றும் இயற்பியலாளர் ஹரோல்ட் யூரே ஆகியோர், நீர் மற்றும் கனிம வாயுக்களின் ஒரு கலவையில் மின்சாரம் பயன்படுத்துவதன் மூலம் உயிர் வாழ்வதற்குத் தேவையான கரிம சேர்மங்கள் (அமினோ அமிலங்கள் போன்றவை) உருவாகலாம் என்பதை நிரூபித்தனர்.

❖ இதில் மின்னல்கள் கடலில் தாக்கிய போது, அது மீத்தேன், அம்மோனியா மற்றும் ஹைட்ரஜன் போன்ற வாயுக்களுடன் வேதியியல் தொடர்புகளைத் தூண்டி கரிம மூலக் கூறுகளை உருவாக்கியது.

❖ தற்போதையப் புதிய ஆய்வின் படி, வெளிப்புற மின்சார ஆற்றலின் தேவையில்லாமல் கரிம சேர்மங்களை உருவாக்க நீர் வீச்சு போதுமானது.

- பூமியில் உயிர்கள் உருவாக வேண்டி இந்த மின்னல்கள் காரணமில்லை என்று இந்தக் கண்டுபிடிப்புகள் காட்டுகின்றன.
- மோதும் அலைகள் அல்லது நீர்வீழ்ச்சிகள் காரணமாக உருவாகும் சிறிய தீப்பொறிகள் அந்தப் பணியைச் செய்திருக்கலாம்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலக மகிழ்ச்சி தரவரிசை 2025

- பின்லாந்து தொடர்ந்து எட்டாவது ஆண்டாக உலகின் மகிழ்ச்சியான நாடாக தனது நிலையைத் தக்க வைத்துள்ளது.
- அதைத் தொடர்ந்து டென்மார்க் மற்றும் ஐஸ்லாந்து ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- ஹமாஸ் மோதல் இருந்த போதிலும் இஸ்ரேல் 8வது இடத்தைப் பிடித்துள்ளது.
- 2012 ஆம் ஆண்டில் 11வது இடத்தில் இருந்த அமெரிக்கா, இதில் 24வது இடத்தில் கடைசி இடத்திற்குச் சரிந்துள்ளது.
- ஆப்கானிஸ்தான் இந்தத் தரவரிசையில் கடைசி இடத்தில் உள்ளது.
- முந்தைய ஆண்டில் 126வது இடத்திலிருந்த இந்தியா, சமீபத்தில் வெளியிடப்பட்ட 2025 ஆம் ஆண்டு உலக மகிழ்ச்சி அறிக்கையில் 118வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இதில் இந்தியாவின் அண்டை நாடுகளில், இலங்கை 133வது இடத்திலும், வங்காள தேசம் 134வது இடத்திலும், பாகிஸ்தான் 109வது இடத்திலும், நேபாளம் 92வது இடத்திலும், சீனா 68வது இடத்திலும் உள்ளன.
- இது ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் நல்வாழ்வு ஆராய்ச்சி மையத்துடன் கேலப், ஐ. நா. அமைப்பின் நிலையான மேம்பாட்டுத் தீர்வுகள் வலையமைப்பு மற்றும் ஒரு தன்னாட்சிக் கொண்ட தலையங்கக் குழு ஆகியவற்றால் வெளியிடப்படுகிறது


World's 10 Most Happiest Countries In 2025

| | Rank |
|---|---|
| Finland | 1 |
| Denmark | 2 |
| Iceland | 3 |
| Sweden | 4 |
| Netherlands | 5 |
| Costa Rica | 6 |
| Norway | 7 |
| Israel | 8 |
| Luxembourg | 9 |
| Mexico | 10 |
| India | 118 |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★